உ

கடவுள் துணை.

கன்னபுரம்

முத்துமாரியம்மன் பதிகம்.

சென்னை:

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்

அவர்களாற்றமது

திருமகள்விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

உ

சிவமயம்.

கன்னபுரம்

முத்துமாரியம்மை பதிகம்.

புயல்போலுமளகத்தின் மீதுற்றநவரத்ன பொன்னணியணிந்தவழகும், புனையுநற்சுட்டியும் பட்டமொடுசிந்துரப் பொட்டிட்டநுதலினழகும், கயல் போலுமளிபோலு மலர்போலுமிளிர்கின்ற கருணை பொழிவிழிகளழகுங், கருதரியமூக்கின்மூக்குத்தினழகும் மொளிகொள்காதணியணிந்தவழகும், மயல் போலும்வஞ்சகரைமாட்டுவெஞ்சூலமணிமணிகரும் புயவழகுமென்மாத்தலையிலணிகின்றபாதத்தினழகுமென் மனதிலுறவந்தருளுவாய், முயல்போனமதி போலுஞ் சதைமேவுபணிமாட முகிலளவுகன்னபுரம்வாழ், முத்தமிழினுத்தமர்கள் சித்தமதினித்தமுறை முத்துமாரிச்செல்வமே. 1

மாதவத்தோர்கடம் மனதிற்குடிகொண்டு மறைமுடியினின்றவொளியே, மாசிலாமணியேநின் மகிமையறியாமூடர் மறுகக்கறுக்குமிருளே, சீதரன்

முதலானதேவரனைவருநாடி தேடரியமுத்திமுதலே தீங்கிலாநின்னடியர் ஞானநெறியனின்றுநற் சின்மயானந்தவடிவே, ஆதரவுநீயன்றி வேறில்லையெனநம்புமடியேன் மனத்தமுதமே, யல்லும்பகலுநின்னடியிணை கண்மறவாத வற்புதமெனக்கருளுவாய்,மூதார்ந்தபுகழ்பரவு வேதாந்தவேதியர்கள் வாதார்ந்தகன்னபுரம் வாழ், முத்தமிழினுத்தமர்கள் சித்தமதினித்தமுறைமுத்துமாரிச்செல்வமே. 2

சிரமதானின்மலர் சேவடிவணங்கியே சீளவுநின் காதையைச், செவிகளாரக்கேட்டு செய்யகண்களினுலுன் றிருமுகந்தனைநோக்கியே, கரமதானின்றிருப்பணிகளைச்செய்தோர்க்கு கனமளவுநினதாலயம், காலினுல்வலம்வந்து காயமுழுதினு முனதுகருணை வெண்ணீறணிந்து, வரமுதவுநின்புகழை வாயினுற்பாடிநின்மலரடிகளணிகற்பக, வாசத்தையென்றனது நாசியாலே யுண்டுவாழ்ந்துகளிகூரவருள்வாய, முரசமதிர்கடைகடொரு படைமகிபர் கொடைமிகுதிமொழியொணுக்கன்னபுரம்வாழ், முத்தமிழினுத்தமர்கள் சித்தமதினித்தமுறை முத்துமாரிச்செல்வமே. 3

தையலர்கள்கண்ணின் வலைக்குள்ளகப் பட்டுழன் றேதயங்கலென்னுந், தாழ்வானவிழலுக் கிறைப்ப

தையொழித்தனது சரணபங்கயபூசையாம், தூய்ய
செந்நெற்பயிரை யோம்பியைப்பொரியினூறு தூற்கு
ணங்களைக்களைந்து, தன்னுசற்பத்தியா மொருபோ
டருக்குமாஞ் சோர்விலாநீர்பாச்சவே, செய்யவுன்றி
வருளெனுங் கதிர்விளைந்தென்றன் றீவினைப்பசித
ணிந்து, செப்புமெய்ஞ்ஞானச் செழுஞ்செல்வமெய்
திற் சிறந்துகளிகூரவருள்வாய், மொய்யலர்கர்ப்பகக்
கையினர்கடம்மொடும் முகில்பொருவு கன்னபுரம்
வாழ், முத்தமிழினுத்தமர்கள் சித்தமதினித்தமு
றை முத்துமாரிச்செல்வமே. 4

தேகப்பெறுங்கப்ப லேறிப்பிறப்பெனுந் திரைக
டலிலோடுநாளில், தீவினையெனும்சுழல் காற்றிலைலறி
வெனுந் திசைதப்பியதிதுரிதமாய், வேகக்கடுந்துய
ரெனுங்கடல்பாய்ந்துமெய் பிணிகளென்னுமலைகள்
மேலிட்டு, வுடைகயினிலுயிரென்னு மால்மியினை
வெய்யவங்கூற்றனுகும், யேகப்பெறுஞ்சுறவெடுத்து
ண்ணகோரத்தையேதென்றெடுத்துரைப்பேன், யிவ்
வண்ணமாயானுமுலகத்திலலையாம லேந்தியேகாத்த
ருளுவாய், மோகத்தைதருமாத ராகமிதுமின்னிதெ
னமுன்னரியகன்ன புரம்வாழ், முத்தமிழினுத்தமர்
கள்சித்தமதினித்தமுறை முத்துமாரிச்செல்வமே. 5

அல்லியங்கவலத்தி லுறைகின்றபிரமனு மரியசத்திராதியென்னை, அடம்வைத்துமிணமதுடன் மலசலமுநாறு முடலாகுங்கிடங்கில்வைத்து, வெல்லொணுப்பந்துசன வாசையென்றேசொலும் விலங்கிட்டுப்போதாமலே வெம்பிணிகளென்னுமரி கண்டமதுபூட்டியே வேதனைக்காளாக்கியும், அல்லற்கடுந்துயரெனும்பெறுநெருப்பையென் னண்டையினின்மூட்டிவைத்தான், அரியரியின்னுமவன் செய்கின்றவாதனைகளளவிட்டுமுடியாதம்மா; முல்லைநகைமங்கையர்கள் கற்பினுறிங்கடொரு மும்மழையகன்னபுரம்வொழ், முத்தமிழினுத்தமர்கள் சித்தமதினித்தமுறை முத்துமாரிச்செல்வமே. 6

உலகங்களெல்லாம் படைத்தந்தவுலகுலவ வுயிர்களெல்லாம்படைத்தல், வுயிர்களுண்ணத்தக்கவூண்களெல்லாம்படைத்துயர்வானவீடும்படைத், தலகிலாநின்னடியர் வாழ்ந்தோங்கவனுதினமு மளவிலாச்செல்வநல்கும்; அருளூறுவவம்மைநீயடியேனையின்றுமன்னையறுகேயிருந்தும், பலகிலேசக் கடலின்மூழ்குமெனையேந்திலை பளபளாநன்றுநன்று, பாரிலிவ்வண்ணமொரு வன்னைசெய்தாலதைப் பார்த்தபேர் நகையார்களோ, முலையூட்டுமன்னையினு மினியகனிவாளரேமுற்றுமிரை கன்னபுரம்வாழ், முத்த

னுத்தமர்கள்சித்தமகிழ்சித்தமுறை முத்துமாரிசசெல்வமே. 7

சித்தமும்புதிதாக மேன்மேலுமனமெலிய நேர்துயரென்றேசொல்வனே, நீங்காதகலியும்வெம்பிணியுமைம்பொறியுஞ்செய் நீடிடரென்றேசொல்வனே சித்தமலையச்செயுஞ் சமுசாரசாகரத் தீமையேன்றேசொல்வனே, செய்யயுன் பாதபூசனை செய்யவொட்டாத தீவினையென்றேசொல்வனே, எத்தனை குறையென் றெடுத்துதானேதுவே னெதற்கு முன்மனமிரங்கா, யென்னன்னைநீயே பராமுகம்பண்ணினல்யாரென்னையாதரிப்பார், முத்தர்வெண்குடை யுடையகொற்றவர்கடம்பெருமை முடிவிலாக் கன்னபுரம்வாழ் முத்தமிழினுத்தமர்கள் சித்தமதினித்தமுறை முத்துமாரிச்செல்வமே. 8

தென்றிசைக்கதிபனு வுலகவுயிருண்டுவளர்தீறவெங்காலவேலன், சிற்றறியயுடையவென் போலொத்தசிறியராம் செந்துக்களைப்பற்றவே, கன்றிலாச்சரசநய பறுவமங்கையரென்னுங்கண்ணிகள்முடிந்துவைத்தாள், கனமான பொன்னுசைமண்ணசையாகுங் கடுந்தூண்டில் யிட்டுவைத்தான், வென்றிலாபந்துசன வாசையதெனுங்கடிய வலையொன்று வீசி

வைத்தான், விபரீதமான கண்டங் களித்தனையும் வென்றுநிறுநின்றருளாவனே, முன்றிவொறு மங்க லக்கடிமுரசவாத்திய முழங்கிவறு கன்னபுரம்வாழ் முத்தமிழினுத்த மதினித்தமுறை முத்துமாரிச்செ ல்வமே. 9

மண்டலந்தனிலுன்றன் மலரடிக்கேமன மகிழ்ந் தேவணங்கிநின்றார், மதுரகவிமொழிகின்ற கவிராச ராகவே மகிமைபெற்றார்கள்சிலபேர், அண்டமுட னெண்டிசையனைத்தாளு மிந்திராதியமரரானார்கள்சி லபேர்,அடையலர்நடுங்கவேசெங்கோள்நடத்திவறு மரசரானார்கள் கிலபேர், விணடிலாவைம்பொறியை வென்றுமெய்ஞ்ஞானவீரரானார்கள்சிலபேர், மேலா னசகலசமபத் தடைந்தார்கள்சிலர்மெய்யானநின்க ருணையால் முண்டகத்தடங்குலவுதடங்கண்முகடள வமொய்த்துவளர்கன்னபுரம்வாழ், முத்தமிழினுத்தம ர்கள்சித்தமதினித்தமுறை முத்துமாரிச்செல்வமே.

முத்துமாரியம்மன்பதிகம்

முற்றிற்று.